***கவனிக்க*** .- *2015.07.10 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1924 - 2015 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2015.07.17

*1924 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 476 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 477 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 479 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 480 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** *ஊழியர் வரவுசெலவுத் திட்ட நிவாரணக்கொடுப்பனவுச் சட்டமூலம் 2015, மே மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

#### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2015 இன் இல. 299

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎஸ்/400.

### இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2013, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்ரின் சத்கோரலகே சுகத் சமிந்த பிரணாந்து, இசைப (உ/68670)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, மே 30.

7-611

---

2015 இன் இல. 300

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎஸ்/397.

### இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2013, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்ரின் நவின் எரங்க குணரத்ன, இசைப (உ/68672)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, மே 30.

7-773

2015 இன் இல. 301

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎஸ்/430.

### இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2013, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர், அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் தடல்லகே கயால் சமந்த அமரநாத், இசைப (உ/67106)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, யூலை 17.

7-609

---

2015 இன் இல. 302

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎஸ்/405.

### இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2013, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது:-

தற்காலிக கப்ரின் ஜொஹானஸ் குலசிங்ககே சன்தமினி எரங்க, இஇபெப (உ/67868)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, மே 30.

7-610

*2015 இன் இல. 303*

*எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎஸ்/395.*

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்*

*2013, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*லெப்டினனட் மெதகம்மெத்தே கெதரஷசிக விராஜ் குமார அமுணவத்த, இசைப (உ/68684)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2013, மே 22.*

*7-612*

---

*2015 இன் இல. 304*

*எம்ஓடி/டிஈஎப்/03/02/வீஎன்எப்/ரீஆர்என்/54.*

**இலங்கைக் கடற்படை - தொண்டர் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் கடற்படை உபசேவைக்கு மாற்றுதல்*

*2015, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வகையில் கீழ் காணப்படும் பெயர் உள்ள உத்தியோகத்தர் இலங்கை கடற்படை தொண்டர் பிரிவில் இருந்து தொண்டர் கடற்படை உப சேவைக்கு மாற்ற அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*லெப்டினனட் (தொ) சிக்கு பத்தகே சந்ரலால் அசேக்க பத்மசிறி, என்வீஎக்ஸ், 5464, இதொகப*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, யூன் 01.*

*7-878*

---

*2015 இன் இல. 305*

*எம்ஓடி/டிஈஎப்/03/02/வீஎன்எப்/ஆர்ஈஎஸ்/51.*

**இலங்கைக் கடற்படை - தொண்டர் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து கேட்டு விலகல்*

*2015, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வகையில் இலங்கை கடற்படை தொண்டர் பிரிவில் கீழ் காணப்படும் பெயர் உள்ள உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து கேட்டு விலகுவதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*உப லெப்டினனட் (தொ) பீன் பருன் டாயின், என்வீஎக்ஸ் 5767, இதொகப*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, மே 18.*

*7-879*

---

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 306*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. கே. டி. எஸ். ருவண்சந்திர அவர்கள், 2015, மாச்சு மாதம் 18 ஆந் திகதியி லிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*எஸ். அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*7-787/1*

*2015 இன் இல. 307*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. என். வேதநாயகம் அவர்கள், 2015, மாச்சு மாதம் 25 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக/ அரசாங்க அதிபராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-787/2

---

*2015 இன் இல. 308*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி ஆர். கேதீஸ்வரன் அவர்கள், 2015, மாச்சு மாதம் 25 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை முல்லைத்தீவு நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக/ அரசாங்க அதிபராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-787/3

---

*2015 இன் இல. 309*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. அருமைநாயகம் அவர்கள், 2015, மாச்சு மாதம் 25 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கிளிநொச்சி நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக/ அரசாங்க அதிபராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-787/4

---

*2015 இன் இல. 310*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஆர். சேமசிங்க அவர்கள், 2015, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை நிதி அமைச்சின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-787/5

---

*2015 இன் இல. 311*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. கே. டீ. என். ரஞ்ஜித் அசோக்க அவர்கள், 2015, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை நிதி அமைச்சின் வர்த்தக முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-787/6

---

*2015 இன் இல. 312*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. என்.எச். எம். சித்ரானந்த அவர்கள், 2015, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை புத்தளம் நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக /அரசாங்க அதிபராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-787/7

# அரசாங்க அறிவித்தல்கள்

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 320)

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ், மாண்புமிகு காணி அமைச்சரினால், திரு. மகா கும்புரகே சிறிவர்தன அவர்கள், அவரது கடமைகளுக்கு மேலதிகமாக 2015.05.01 ஆந் திகதி தொடக்கம் அநுராதபுரம், மாத்தளை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் காணி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி ஐ. எச். கே. மகாநாம,
செயலாளர்,
காணி அமைச்சு.

காணி அமைச்சு,
காணிச் செயலகம்,
''மிஹிகந்த மெதுர'',
1200/6,
இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

7-673/1

---

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 320)

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ், மாண்புமிகு காணி அமைச்சரினால், திரு. பேசாகே பியசேன அவர்கள், அவரது கடமைகளுக்கு மேலதிகமாக 2015.05.01 ஆந் திகதி தொடக்கம் அநுராதபுரம், மாத்தளை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் காணி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி ஐ. எச். கே. மகாநாம,
செயலாளர்,
காணி அமைச்சு.

காணி அமைச்சு,
காணிச் செயலகம்,
''மிஹிகந்த மெதுர'',
1200/6,
இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

7-673/2

---

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 320)

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ், மாண்புமிகு காணி அமைச்சரினால், திரு. வன்னி நாயக்க முதியன்சலாகே ரத்நாயக்க அவர்கள், அவரது கடமைகளுக்கு மேலதிகமாக 2015.05.01 ஆந் திகதி தொடக்கம் அநுராதபுரம், மாத்தளை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் காணி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி ஐ. எச். கே. மகாநாம,
செயலாளர்,
காணி அமைச்சு.

காணி அமைச்சு,
காணிச் செயலகம்,
''மிஹிகந்த மெதுர'',
1200/6, இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

7-673/3

---

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 320)

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ், மாண்புமிகு காணி அமைச்சரினால், திரு. நவரத்ன திசாநாயக்கலாகே சுனில் ரத்னாயக்க அவர்கள், அவரது கடமைகளுக்கு மேலதிகமாக 2015.05.01 ஆந் திகதி தொடக்கம் அநுராதபுரம், மாத்தளை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் காணி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி ஐ. எச். கே. மகாநாம,
செயலாளர்,
காணி அமைச்சு.

காணி அமைச்சு,
காணிச் செயலகம்,
''மிஹிகந்த மெதுர'',
1200/6,
இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

7-673/4

---

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 320)

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ், மாண்புமிகு காணி அமைச்சரினால், திரு. அத்தபத்து முதியன்சலாகே முதலிஹாமிலேகேதர சரத் ஆனந்த அவர்கள், அவரது கடமைகளுக்கு மேலதிகமாக 2015.05.01 ஆந் திகதி தொடக்கம் அனுராதபுரம், மாத்தளை, குருநாகல் மாவட்டங்களில் காணி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி ஐ. எச். கே. மகாநாம,
செயலாளர்,
காணி அமைச்சு.

காணி அமைச்சு,
காணிச் செயலகம்,
''மிஹிகந்த மெதுர'',
1200/6, இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

7-673/5

### அஞ்சல் திணைக்களம்

அஞ்சல் அலுவலக சட்டத்தின் 45 ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

**2012.01.01 ஆந் திகதி தொடக்கம் 2012.12.31 ஆந் திகதி வரை விநியோகிக்கப்பட்ட காசுக் கட்டளைகள்**

காசுக்கட்டளை ஒன்று அதன் விநியோக மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து ஆறு மாதத்திற்குச் செல்லுபடியாகும் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் காலங்கடந்த காசுக் கட்டளைகள் அதன் விநியோக மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் அதனை மாற்றிக் கொடுக்க முடியும். இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட காசுக் கட்டளைகள் எக்காரணத்திற்காகவும் மாற்றிக்கொடுப்பதற்கோ கால நீடிப்புச் செய்வதற்கோ முடியாது. இது போன்ற காசுக் கட்டளைகளின் பெறுமதி அரசாங்கத்தின் வரவு கணக்கிற்கு மாற்றப்படும்.

2. ஆனால் பின்வரும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் இரண்டு வருடங்களிற்குள் மாற்றப்படாத காசுக் கட்டளைகள் அரசாங்க வரவு கணக்கிலிருந்து அதற்குரிய தண்டப் பணத்தைக் கொடுத்து மீளப்பெற்று மாற்றிக் கொடுக்க முடியும் :-

(i) நீதிமன்றத்தில் சமர்ப்பித்த காசுக்கட்டளைகள்;
(ii) சட்ட நிமித்தம் காரணமாக வீட்டு வாடகை கட்டளை சபையினால் தடுத்து வைக்கப்பட்ட காசுக்கட்டளைகள் ;
(iii) பணத்தைப் பெறுபவர் வெளிநாடு சென்றிருந்தால் (கடவுச்சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும்);
(iv) பணத்தைப் பெறுபவர் மோசமாக உடல் நிலை பாதிக்கப் பட்டிருந்தால் (அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் உறுதிப் படுத்தக்கூடிய வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.).

3. மேற்படி 2 (i) (ii) இல் கூறப்பட்ட காசுக்கட்டளைகளை இது சம்பந்தமான வர்த்தமானி பத்திரிகை பிரசுரிக்கும் தினத்திலிருந்து 3 மாத காலத்திற்குள்ளோ அல்லது அதற்கு முன்னரோ காசுக்கட்டளை சம்பந்தமான விபரங்களடங்கிய வழக்கு இலக்கத்துடன் 2 (i) (ii) இன் கீழ் காசுக்கட்டளை சமர்ப்பிப்பதற்கு அசௌகரியமாக இருந்தால் அதற்கான ஆவணங்களை காசுக்கட்டளைச் சேவை கட்டுப்பாட்டாள ருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

4. அவ்வாறு தற்பொழுது நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குக்காகவும் வேறு சட்ட நோக்கங்களுக்காகவும் நீதிமன்ற கட்டளை மூலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளைகள் வீட்டு வாடகை கட்டுப்பாட்டாளர் சபை வழக்கு சம்பந்தமாக தடுத்து வைக்க வேண்டிய காசுக்கட்டளைகள் திணைக்களங்கள் மற்றும் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் காசுக்கட்டளைகள் இதற்குள்ளடங்காது.

5. இதன்படி மீதியாக உள்ள காசுக்கட்டளைகளை விரைவாக முடிவுறுத்துவதற்காக 2012.01.01 ஆந் திகதி தொடக்கம் 2012.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டுள்ள காசுக்கட்டளைகளுக்கு இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்த தினத்திலிருந்து மூன்று மாதங்கள் வரையுமே மீளளிப்புச் செய்ய முடியும். இது சாதாரண காசுக்கட்டளைகள், மற்றும் பெறுமதி செலுத்தப்பட வேண்டிய காசுக்கட்டளைகள், தந்திக் காசுக்கட்டளைகள், பெக்ஸ் காசுக்கட்டளைகள் சகலவற்றிற்கும் பொருந்தும்.

அவ்வாறு மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதின் கீழ், காசுக் கட்டளைகளின் பெறுமதி அரசாங்க வருமானத்துக்கு வரவு வைக்கப்பட்டிருந்தால்அந்தக் காசுக்கட்டளைகளின் பெறுமதி நிதிப் பிரமாணங்களுக்கு அமைய வருமானத்தில் மீளச் செலுத்துவதாக கவனத்தில் கொண்டு உரியவர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. ஆகவே மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு காசுக்கட்டளைகளுக்கான பணத்தை மீளளிப்பதற்கு கவனத்தைச் செலுத்தும் பொருட்டு எழுத்துமூலம் மேற்கொள்ளப்படும் வேண்டு கோள் மற்றும் உரிய காசுக்கட்டளையுடன் காசுக்கட்டளைச் சேவைக் கட்டுப்பாட்டாளருக்கு கீழ்க் காணப்படும் முகவரிக்கு இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 03 மாதத்துக்கு உள்ளோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்புமாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், வாடகை கட்டுப்பாட்டாளர் சபை, அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், அரச நிறுவனங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்:-

காசுக்கட்டளைச் சேவை கட்டுப்பாட்டாளர்
அஞ்சல் கட்டடத்தொகுதி,
அஞ்சல் திணைக்களம்,
கண்டி.

7. மேலும் 2012.01.01 ஆந் திகதி தொடக்கம் 2012.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டு, காலம் முடிந்த காசோலைகளுக்காக பணம் மீளச் செலுத்துமாறு பின்னர் விடுக்கப்படும் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எக்காரணம் கொண்டும் அவ்வாறான காசுக்கட்டளைகளுக்கான பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

8. 2012.01.01 ஆந் திகதிக்கு முன் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு காசுக்கட்டளைக்கும் எக்காரணம் கொண்டும் விடுக்கப்படும் வேண்டுகோளுக்காக பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

கௌரவ எம். எச். அப்துல் ஹலீம்,
முஸ்லிம் சமய விவகாரங்கள்
மற்றும் அஞ்சல் அமைச்சர்.

முஸ்லிம் சமய விவகாரங்கள் மற்றும்
அஞ்சல் அமைச்சு,
7 ஆவது மாடி அஞ்சல் தலைமையக கட்டிடம்,
310, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 1.

7-869

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி

1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள் : 1449299, 1589278 மற்றும் 1738550 - நளின் தனசேக்க வீரசேக்கர

2015, பெப்புருவரி 23 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது:

"நளின் கொண்ஷ்ரக்சன் கம்பனி என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் நளின் தனசேக்க வீரசேகர என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி சார்பாக (இவ் அட்டவணை 1 இல் சொல்லப்பட்ட) காணியை ஈடுவைத்து பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு

எஸ். எல். வீரசேகர அத்தாட்சிப்படுத்திய 2006.12.01 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 10479 மற்றும் 2007.2.20 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 10741 மற்றும் 2008.8.1 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 12519 மற்றும் 2009.2.10 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 13156 மற்றும் 21.12.2012 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 18144 மற்றும் 2014.05.13ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 19741 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறு புரிந்துள்ளதாலும், கடன் எடுத்த நளின் கொண்ஷ்ரக்சன் கம்பனி என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் நளின் தனசேக்க வீரசேகர என்பவர் இவ் அட்டவணையில் 2 ஆவது சொல்லப்பட்ட காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீரவின் 2013.1.28 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 3703 மற்றும் 2013.08.01 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 3793 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்,

அத்துடன் "நளின் கொண்ஷ்ரக்சன் கம்பனி என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் நளின் தனசேக்க வீரசேகர (இவ் அட்டவணையில் 3 ஆவது சொல்லப்பட்ட) காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீரவின் 2013.8.1 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 3792 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறிகளின் பிரகாரம் 2014.12.31 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ரூபா 2,69,31,274.25 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் விசேட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் படி மேற்படி ஈட்டு முறி இலக்கங்கள் 10479, 10741, 12519, 13156, 18144, 19741, 3703, 3793, 3792 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் 1 ஆவது 2 ஆவது மற்றும் 3 ஆவது அட்டவணைகளில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி கூறப்பட்ட பணத்தொகையான ரூபா 2,69,31,274.25 உடனும் 2015.01.01 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 1,29,65,440 க்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 16% வட்டியும் மேலும் 1,20,00,000 பணத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு 15.5% வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இல. 182, 3 ஆவது மாடியில் உள்ள ஏலதாரர்கள் திரிவின்கா சேனநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 1 ஆவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், அதிகாரிபத்து ரயிகம் கோரளையில் பண்டாரகம பிரதேச செயலாளர் மற்றும் ரயிகம தெற்கு இல. 656 கிராம அலுவலர் பிரிவில் ரயிகம கிராமத்தில் அமைந்துள்ள பெலவத்தை காணிக்கு நில அளவையாளர் வை. பி. கே. கொஸ்தா அவர்களால் தயாரிக்கப்பட்ட 1981.04.30 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1448 இல் காட்டப்பட்ட லொட் 1 என்ற காணியின் எல்லைகள் - வடக்கு : பாதை ; கிழக்கு : பெலவத்தை காணியின் பகுதி ; தெற்கு : லொட் 2 ; மேற்கு : பத்தவட்ட வீதி, இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 34பே. இக்காணியிலுள்ள மரங்கள், தாவரங்கள், கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து இக்காணி ஹொரணை காணிப் பதிவகத்தில் B 121/136 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 2 ஆவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், அதிகாரிபத்து ரயிகம் கோரளையில் பண்டாரகம பிரதேச சபை எல்லையில் பண்டாரகம மாவட்டச் செயலாளர் மற்றும் 665 ரம்புக்கன்ன கிராம அலுவலர் பிரிவில் ரம்புக்கன்ன கிராமத்தில் அமைந்துள்ள கனேவத்தை காணிக்கு நில அளவையாளர் வை. கருணாரத்ன கொஸ்தா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1999.8.24 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2617 இல் காட்டப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 1 மற்றும் வரைபடம் இல. 1888 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2, 3,4, 5 மற்றும் 6 பகுதிகள் மற்றும் வரைபட இலக்கம் 1342 இல் லொட் 19 ; கிழக்கு : வரைபட இலக்கம்1342 (பன்சல காணி) லொட்13 ; தெற்கு : ஒரபொடுவகேவத்த அல்லது முணமல காவத்த நிமல் சரத் சந்திர பெரேரா மற்றும் முணமலகாவத்த குணசேன பெரேராவுக்கு சொந்தமானது ; மேற்கு: சங்கமித்த மாவத்தை, இக் காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 37.5பே. மேற்படி வரைபட இலக்கம் 2617 படி இக் காணி ஹொரணை காணிப் பதிவகத்தில் B 224/24 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 3 ஆவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், அதிகாரிபத்து ரயிகம் கோரளையில் பண்டாரகம பிரதேச சபை எல்லையில் பண்டாரகம பிரதேச செயலாளர் மற்றும் இலக்கம் 663 பண்டாரகம மேற்கு கிராம அலுவலர் பிரிவில் பண்டாரகம கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடம் இலக்கம் 109A பாணந்துறை வீதியிலுள்ள பம்முனேகேவத்த காணிக்கு நிலஅளவையாளர் எஸ். போப்ப ஆராச்சி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2005.7.25 ஆந் திகதியுடைஇய வரைபடம் இலக்கம் 4182 இல் காண்பிக்கப்பட்ட லொட் A 2 காணியின் எல்லைகள் -வடக்கு: லொட் A 1 ; கிழக்கு : வரைபட இலக்கம் 3683 லொட் B ; தெற்கு : வரைபட இலக்கம் 3683 லொட் C ; மேற்கு: மஸ்வில செல்லும் வீதி இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 20.68பே. மேற்படி வரைபட இலக்கம் 4182. இக் காணி ஹொரணை காணிப் பதிவகத்தில் B 185/192 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ரஞ்சனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

7-804

---

## சம்பத் வங்கி பீ. எல். சீ.

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

குசும்சிறி சப்லயார்ஸ்
கணக்கு இல.: 0007 1002 0043

2015, சனவரி மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசு எஸ். ரீ. கே. வீபெத்த

என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஒற்றோபர் 04 ஆம் திகதியிடப்பட்ட இல. 2628 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பெயர் மற்றும் வடிவில் "குசும்சிறி சப்லையார்ஸ்" எனும் மகுடத்தின் கீழ் இயங்கும் வியாபாரத்தின் பேரில் பங்காளர்களான கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் கூறப்பட்ட குடியரசின், தெதல்லகே நந்தசிறி சில்வா மற்றும் குமாரபத்தி மோஹோட்டிலாகே சில்வா என்பவர்களில் கடன்பட்டார் எனும் வகையில் தெதல்லகே நந்தசிறி சில்வா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று அறுபத்தொன்பது ரூபா பதினெட்டு சதம் (ரூ. 2,19,10,769.18) 2014, திசெம்பர் 22 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று அறுபத்தொன்பது ரூபா பதினெட்டு சதம் (ரூ. 2,19,10,769.18) 2014, திசெம்பர் 23 ஆந் திகதி முதல் இல.2628 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே பதினேழு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து இருநூற்று எண்பத்தேழு ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 1,17,94,287.24) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%) மேலும் ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2628 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 64 ஐ ஏற்ற உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. திலக்கரத்ன என்பவ ரால் தயாரிக்கப்பட்ட 1990, யூலை 30 ஆந்திகதியிடப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட பிற்குறிப்பைக் கொண்ட இல. 746 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: டீ. எஸ். சேனாநாயக்க வீதி மதிப்பீட்டு இல. 31 ஐ ஏற்ற வளவு ; கிழக்கு: கொழும்பு வீதி வரிமதிப்பீட்டு இல. 60 ஐ ஏற்ற வளவு ; தெற்கு : கொழும்பு வீதி மற்றும் ; மேற்கு : கொழும்பு வீதி வரிமதிப்பீட்டு இல. 68 ஐ ஏற்ற வளவு. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று தசம் இரண்டு மூன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 3.230பே.) அல்லது 0.00817 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்தும்.

கூறப்பட்ட லொட் 01 இன் கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு வீதியினூடாக அமைந்த கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 64ஐ ஏற்ற உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜியோ ஈ டி லா மோட் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1913, சனவரி 27 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : டி சொய்சா சீமாட்டியினுடைய சொத்து ; கிழக்கு : ஹபிபுவுக்கு சொந்தமான இல. 227 ஐ ஏற்ற மற்றும் வீடு ; தெற்கு : கொழும்பு வீதி மற்றும் ; மேற்கு : சிபைலாவின் மனைவிக்கு சொந்தமான இல. 224 ஐ ஏற்ற வளவு மற்றும் வீடு, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று தசம் மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 3.3பே.) அவ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கண்டி பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 322/278 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிக் குழுமச் செயலாளர்கள்.

7-835

---

### டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கியின் பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014, ஒற்றோபர் 31 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"களனியில் 'R&P மோட்டோர் ட்ரேடேர்ஸ்' என்ற பெயர்மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் பங்காண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற கடவத்தையைச் சேர்ந்த நக்குலுகமுவ கமகே ரோஹித்த சந்திரலால் மற்றும் ஹொல்லுபத்திரகே பிரியாணி கல்தேரா என்போர், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. எஸ். கனேகொட என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட2008, சனவரி 31 ஆந் திகதிய 733 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும், 2008, சனவரி 31ஆந் திகதிய 734 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவு களைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலுாலும்,

அத்துடன் 2014, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடி முப்பத்தெட்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 1,38,37,333.59) கொண்ட தொகையும், 2014, பெப்புருவரி 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை நாற்பத்தேழு இலட்சத்து இருபத்தை

யாயிரத்து ஐம்பத்துமூன்று ரூபா பதினாறு சதம் (ரூ. 47,25,053.16) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து சதவீதத்தில் கணக்கிடப்பட்ட (25%) வட்டியையும் பதினையாயிரத்து முப்பத்தொரு ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 15,031.99) கொண்டதொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்துநான்கு சதவீதத்தில் கணக்கிடப்பட்ட (24%) வட்டியும் சொல்லப்பட்ட நக்குலுகமுவ கமகே ரோஹித்த சந்திரலால் மற்றும் ஹொல்லுபத்திரகே பிரியாணி கல்தேரா என்போரிடமிருந்து டீ. எப். சீ. சீ. வர்த்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 733 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஹொல்லுபத்திரகே பிரியாணி கல்தேரா என்பவரினால் டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ க்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் மேற்கூறப்பட்ட 734 ஆம் இலக்க ஈட்டு முறிமூலம் நக்குலுகமுவ கமகே ரோஹித்த சந்திரலால் மற்றும் ஹொல்லுபத்திரகே பிரியாணி கல்தேரா என்போரினால் டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட கையிருப்புக்களும் புத்தகக்கடன்களும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 733 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையினுள் தலஹேன கிராமத்தில் அமைந்துள்ளதும், கொடபொரகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. ஜீ. பியசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.10.13 ஆந் திகதிய 2491 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1A/14 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1A/14 பின்வரும் எல்லைகளை யுடையது - வடக்கு : 674A/2009 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A/10, காணித்துண்டம் 1A/12, 1A/13 ; கிழக்கு : 1050 ஆம் இலக்க வரைபடத்தில் 12 அடி அகல வீதி ; தெற்கு : 489 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B மற்றும் ; மேற்கு : எம். ஆர். எச்.ஆர். டி சில்வாவின் ஆதனம்; விஸ்தீரணமுடையது. அதன் மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் முப்பத்தேழு தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 37.65பே.) (0.09522 ஹெக்.) கொண்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட காணித்துண்டம் 1A/14 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்டகாணித்துண்டு, கீழே மேலும் விபரமாக விவரிக்கப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பீலிக்ஸ் டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.09.25 ஆந் திகதிய 489 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 1A இன் எஞ்சியுள்ள பாகமாகவுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகமப் பதிவுப் பிரிவினுள் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்லக் கூறின் எல்லைகளினுள் தலஹேன கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் கொடபொரகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பீலிக்ஸ் டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.09.25 ஆந் திகதிய 489 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1A என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; காணித்துண்டம் 1A என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட அக்காணித்துண்டு அடங்கலும் ; காணித்துண்டம் 1A என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : வீதி ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. எஸ். குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984.04.30 ஆந் திகதிய 1050 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 5 (வீதிக்கான ஒதுக்கிடம் - 12 அடி அகலம்) மற்றும் 3 அடி அகல வீதிக்கான ஒதுக்கிடம் ; தெற்கு : சொல்லப்பட்ட 489 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B மற்றும் ; மேற்கு : எம். ஆர். எச். ஆர். டி சில்வா, ஜயவதி மற்றும் சுனில் கேரகலவின் ஆதனங்கள்; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 489 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் சைபர் ஒன்று தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ. 3றூ. 1.50பே.) கொண்டுள்ளதுடன் ஹோமாகமக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட காணித்துண்டம் 1A என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு, அண்மைய வரைபடத்தின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகமப் பதிவுப் பிரிவினுள் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்லக் கூறின் எல்லைகளினுள் தலஹேன கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் கொடபொரகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.010.30 ஆந் திகதிய 1191/2005 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1A/1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; காணித்துண்டம் 1A/1 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட அக்காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : வீதி ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. எஸ். குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984.04.21 ஆந் திகதிய 1050 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 5 (வீதிக்கான ஒதுக்கிடம் - 12 அடி அகலம்) ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பீலிக்ஸ் டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.09.25 ஆந் திகதிய 489 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B மற்றும் ; மேற்கு : கேரகல, ஜயவதி மற்றும் எம். ஆர். எச். ஆர். டி சில்வாவின் காணிகள்; விஸ்தீரணத்தில் இது, சொல்லப்பட்ட 1191/ 2005 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் சைபர் மூன்று தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ. 3றூ. 3.50பே.) கொண்டுள்ளது.

"பின்வருவனவற்றிலும் அவற்றின் மீதும் அத்துடன்/அல்லது அவை நெடுகிலும் முதலாவது ஈடுவைப்பவர், அவரது வருகையாளர்கள், பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக்கலைஞர்கள், வேலையாட்கள், சேவையாளர்கள், வாடகைக்குடியிருப்பாளர்கள், உத்தரவுபெற்றவர்கள் மற்றும் அதிதிகள், இதன்பின்னர் எல்லா நேரங்களிலும் அவர்களின் விருப்பத்தின் பேரில் எத்தகையனவுமான எல்லா நோக்கங்களுக்காகவும் பகலில் அல்லது இரவில் அதனோடு வழமையாக வைத்திருக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது வேறு வகையாகத் துய்க்கப்பட்ட எல்லா மற்றும் தனித்தனியான உரிமைகள், வழிகள், அனுகூலங்கள் மற்றும் இணைந்துள்ளவையுடன் சேர்த்து இதன் கீழ் குறிப்பாக விவரிக்கப்பட்ட வீதி வழியில் அல்லது அதுநெடுகிலும் அல்லது அதன் மீது பாரமேற்றப்பட்ட அல்லது ஏற்றப்படாத குதிரைகள், கால்நடைகள் அல்லது வேறு விலங்குகள், மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் மற்றும் வேறு ஒவ்வொரு வகையினவையுமான வாகனங்களுடனோ அவையின்றியோ நடந்து செல்வதன்மூலம் அல்லது எத்தகையதுமான வேறுவகையாகச்

செல்வதற்கும், திரும்பி வருவதற்கும், கடந்து செல்வதற்கும், மீளக்கடந்து செல்வதற்கும், இடையறாத உட்செல்கை, வெளிச்செல்கை மற்றும் பின்னடைவு வழியும் செல்வழியும் என்பதற்கு முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும் அனுமதியும் மற்றும் மின்சார வடங்கள், மேந்தலைக் கம்பிகள், வடிகாலமைப்பு, வாயு, நீர்க்குழாய்கள், உபகரணங்கள் மற்றும் எத்தகைய வகையினவையுமான வேறு உபாயங்களை இடுவதற்கான முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும்.”.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர், எச். பேர்ட்டி புத்திசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009, யூன் 18 ஆந் திகதிய 674A/ 2009 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A/3 மீதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. எஸ். குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984, ஏப்பிறல் 30 ஆந் திகதிய 1050 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 5 இன் மீதுமான செல்வழியுரிமையுடன்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையினுள் தலஹேன கிராமத்தில் அமைந்துள்ளதும், கொடபொரதகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். பேர்ட்டி புத்திசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009, யூன் 18 ஆந் திகதிய 674/A2009 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1A/4 என அடையாளமிடப் பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1A/4 பின்வரும் எல்லைகளையுடையது- வடகிழக்கு : காணித்துண்டம் 1A/1 ; தென்கிழக்கு : காணித்துண்டம் 1A/8 ; தென்மேற்கு: காணித்துண்டம் 1A/7 மற்றும் ; வடமேற்கு : காணித்துண்டம் 1A/3 (10 அடிஅகல வீதிக்கான ஒதுக்கிடம்) ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் சைபர் தசம் சைபர் ஒன்று ஐந்து இரண்டு ஹெக்டேயர் (0.0152 ஹெக்.) அல்லது ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 6.00பே.) கொண்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட காணித்துண்டம் 1A/4 என அடையாள மிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு, கீழே மேலும் விபரமாக விவரிக்கப்பட்ட காணியின் மீள் நிலஅளவையாகவும் உட்பிரிவிடுகை யாகவுமுள்ளது:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகமப் பதிவுப் பிரிவினுள் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்லக் கூறின் எல்லைகளினுள் தலஹேன கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் கொடபொரகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பீலிக்ஸ் டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.09.25 ஆந் திகதிய 489 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1A/ என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; காணித்துண்டம் 1A என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட அக்காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : வீதி ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. எஸ். குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984.04.30 ஆந் திகதிய 1050 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 5 (வீதிக்கான ஒதுக்கிடம் - 12 அடி அகலம்) மற்றும் 3 அடி அகல வீதிக்கான ஒதுக்கிடம் ; தெற்கு : சொல்லப்பட்ட 489 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B மற்றும் ; மேற்கு : எம். ஆர். எச். ஆர். டி சில்வா, ஜயவதி மற்றும் சுனில் கேரகலவின் ஆதனங்கள் ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 489 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் சைபர் ஒன்று தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ. 3றூ. 1.50பே.) கொண்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட காணித்துண்டம் 1A என அடையாள மிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு, அண்மைய வரைபடத்தின் படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகமப் பதிவுப் பிரிவினுள் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்லக் கூறின் எல்லைகளினுள் தலஹேன கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் கொடபொரகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.010.30 ஆந் திகதிய 1191/2005 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1A/1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டது மான அக்காணித்துண்டு அடங்கலும்; காணித்துண்டம் 1A/1 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட அக்காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : வீதி ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. எஸ். குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984.04.21 ஆந் திகதிய 1050 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 5 (வீதிக்கான ஒதுக்கிடம் - 12 அடி அகலம்) ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பீலிக்ஸ் டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.09.25 ஆந் திகதிய 489 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B மற்றும் ; மேற்கு : கேரகல, ஜயவதி மற்றும் எம். ஆர். எச். ஆர். டி சில்வாவின் காணிகள்; விஸ்தீரணத்தில் இது, சொல்லப்பட்ட 1191/ 2005 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் சைபர் மூன்று தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ. 3றூ. 3.50பே.) கொண்டுள்ளது.

“பின்வருவனவற்றிலும் அவற்றின் மீதும் அத்துடன்/அல்லது அவை நெடுகிலும் முதலாவது ஈடுவைப்பவர், அவரது வருகையாளர்கள், பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக்கலைஞர்கள், வேலையாட்கள், சேவையாளர்கள், வாடகைக்குடியிருப்பாளர்கள், உத்தரவுபெற்றவர்கள் மற்றும் அதிதிகள், இதன்பின்னர் எல்லா நேரங்களிலும் அவர்களின் விருப்பத்தின் பேரில் எத்தகையனவுமான எல்லா நோக்கங்களுக்காகவும் பகலில் அல்லது இரவில் அதனோடு வழமையாக வைத்திருக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது வேறு வகையாகத் துய்க்கப்பட்ட எல்லா மற்றும் தனித்தனியான உரிமைகள், வழிகள், அனுகூலங்கள் மற்றும் இணைந்துள்ளவையுளுடன் சேர்த்து இதன் கீழ் குறிப்பாக விவரிக்கப்பட்ட வீதி வழியில் அல்லது அதுநெடுகிலும் அல்லது அதன் மீது பாரமேற்றப்பட்ட அல்லது ஏற்றப்படாத குதிரைகள், கால்நடைகள் அல்லது வேறு விலங்குகள், மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் மற்றும் வேறு ஒவ்வொரு வகையினவையுமான வாகனங்களுடனோ அவையின்றியோ நடந்து செல்வதன்மூலம் அல்லது எத்தகையதுமான வேறுவகையாகச் செல்வதற்கும், திரும்பி வருவதற்கும், கடந்து செல்வதற்கும், மீளக்கடந்து செல்வதற்கும், இடையறாத உட்செல்கை, வெளிச்செல்கை மற்றும் பின்னடைவு வழியும் செல்வழியும் என்பதற்கு முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும் அனுமதியும் மற்றும் மின்சார வடங்கள், மேந்தலைக் கம்பிகள், வடிகாலமைப்பு, வாயு, நீர்க்குழாய்கள், உபகரணங்கள் மற்றும எத்தகைய வகையினவையுமான வேறு உபாயங்களை இடுவதற்கான முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும்.”.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர், எச். பேர்ட்டி புத்திசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009, யூன் 18 ஆந் திகதிய 674A/ 2009 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A/3 மீது செல்வழியுரிமையுடன்.

**734 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

2008, சனவரி 25 ஆந் திகதியன்றுள்ளவாறு வியாபாரக் கையிருப்பு வணிகப் பொருட்கள் பொருட்களும் சாமான்களும் மூலப் பொருட்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை செய்து முடித்த பண்டங்கள் மற்றும் செய்து முடிக்காத பண்டங்களின் முழுமையும்.

| விவரணம் | தொகை |
|---|---|
| 12 அளவு சில்லு மூடி 4/துண்டுகள் | 200 தொகுதி |
| 13 அளவு சில்லு மூடி 4/துண்டுகள் | 260 தொகுதி |
| 14 அளவு சில்லு மூடி 4/துண்டுகள் | 180 தொகுதி |
| ஸ்டியோரிங் மூடி (M) | 280 துண்டுகள் |
| காற்றுத்தடை ஸ்டைகார் | 155 துண்டுகள் |
| ஸ்டியோரிங் வீல் | 110 துண்டுகள் |
| BEs கிட் | 100 துண்டுகள் |
| 2 டின் கார் DVF/MP4 தொகுதி | 20 தொகுதி |
| கார் கசெட்டு (Re-) | 80 தொகுதி |
| சோலக்ஸ் கார் T.V. அன்டனா | 100 தொகுதி |
| கார் ஸ்பீக்கர் சப் வூபர் | 20 தொகுதி |
| கார் ஸ்பீக்கர் | 200 தொகுதி |
| கார் எச்சரிக்கை முறைமை | 60 தொகுதி |
| சென்ட்டர் பூட்டு முறைமை | 30 தொகுதி |

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் பத்தரமுல்ல வியார் ஹவுஸ் 162/3A சமனல மாவத்தை, தலஹேன, மாலபே என்ற வளவுகளிலும் அதன்மீதும் இப்போது இருக்கின்ற அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்ற அத்துடன் ஈடுவைப்போர் இப்போது தொழில் நடாத்துகின்ற அத்துடன் இதன் பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக் காலம் தொழில் கொண்டு நடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட வியாபாரக் கையிருப்பு, வணிகப் பொருட்கள், பொருட்களும் சாமான்களும், மூலப்பொருட்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை, செய்து முடித்த பண்டங்களும் செய்து முடிக்கப்படாத பண்டங்களும் வேறெல்லா இனங்களும் எத்தகைய வகையினதுமான அல்லது தன்மையினதுமான வேறு அசைவுள்ள ஆதனமும் என்பன காலத்துக்குக் காலம் களஞ்சியப் படுத்தப்படக்கூடிய, வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய வேறெவையேனும் கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அத்துடன் இச் சாதனம் தொடர்ந்திருக்கும் போது சொல்லப்பட்ட வியாபாரக் கையிருப்பு, வணிகப் பொருட்கள், பொருட்களும் சாமான்களும், மூலப்பொருட்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை, செய்து முடித்த பண்டங்களும் செய்து முடிக்கப்படாத பண்டங்களும் வேறெல்லா இனங்களும் எத்தகைய வகையினதுமான அல்லது தன்மையினதுமான வேறு அசைவுள்ள ஆதனமும் என்பவற்றின் முழுமையும் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய, வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும், களஞ்சியங்களிலும் மற்றும் வளவுகளிலும் அவற்றின் மீதும் அத்துடன் இதன் பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும் எல்லா நேரங்களிலும் மேற்கூறப்பட்ட கிட்டங்கிகளினுள், களஞ்சியங்களினுள் மற்றும் வளவுகளினுட் கொண்டு வரப்பட வேண்டிய அல்லது கொண்டு வரப்படக்கூடிய, வைத்திருக்கப்பட வேண்டிய அல்லது வைத்திருக் கப்படக்கூடிய அல்லது கிடக்கவேண்டிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அவற்றின்மீதும் மற்றும் ஈடுவைப்போர் இதன் பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும் அதன் தொழிலை அல்லது வியாபாரத்தை அப்புறப்படுத்த வேண்டிய அல்லது அப்புறப்படுத்தக்கூடிய அல்லது அதன் தொழிலை அல்லது வியாபாரத்தைக் கொண்டு நடாத்த வேண்டிய அல்லது கொண்டு நடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட வியாபாரக் கையிருப்பு, வணிகப் பொருட்கள், பொருட்களும் சாமான்களும், மூலப்பொருட்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை, செய்து முடித்த பண்டங்களும் செய்து முடிக்கப்படாத பண்டங்களும் வேறெல்லா இனங்களும் எத்தகைய வகையினதுமான அல்லது தன்மையினதுமான வேறு அசைவுள்ள ஆதனமும் என்பன எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய வேறேதேனும் தொழிலிடத்திலும் அல்லது வேறெவையேனும் தொழிலிடங்களிலும் மேற்கூறப்பட்ட கிட்டங்கிகளுக்கு, களஞ்சியங்களுக்கு மற்றும் வளவுகளுக்கு அல்லது தொழிலிடங்களுக்கு அல்லது அவற்றிலிருந்து இடைப்பெயர்விலுள்ள அல்லது சொல்லப்பட்ட குடியரசில் கொழும்பு மாவட்டத்தில் துறை மேடையில் அல்லது குதங்களில் கப்பலேற்றப்படுவதற்கு அல்லது விடுவிக்கப்படுவதற்குக் காத்திருக்கும் மேற்கூறப்பட்ட எல்லா ஆதனமும்.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம நிறைவேற்றலுவலர்.

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

7-851